# திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சி

**ந.க.எண் : 482 / 2010 / தள** **நாள் : 26.11.2010**

## குறுகிய கால ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

திருவையாறு பேரூராட்சியில் 2010 – 2011ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் வேலைகள் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் எதிர் வரும் 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் நாள் (16.12.2010) வியாழக்கிழமை மாலை 4.00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி தினத்தில் வரும் ஒப்பந்தபுள்ளியை அன்றைய தினமே 16.12.2010ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்களின் முன்னிலையில் பிரித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கீழே குறிப்பிட்ட வேலைக்கான ஒப்பந்தபுள்ளி படிவம் டெண்டர் ஷெட்யூல் 15.12.2010 தேதி புதன்கிழமை மாலை 3.00 மணி வரையில் அதற்கான கட்டணத்தொகையை செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## 2010 – 11ம் ஆண்டு பொதுநிதி பணிகள்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | டெண்டர் டெபாசிட் | டெண்டர் ஷெட்யூல் | வேலையின் கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | ராஜா நகர் தார்சாலை அமைத்தல் பணி | 6,00,000– | 30,000– | ரூ.3000 + ரூ.600–(Vat 2%) | 60 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் அரசு விதிமுறைகளின்படி 2010–11ம் ஆண்டிற்கு தங்களது ஒப்பந்தகாரர் பதிவை புதுப்பித்துக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஒப்பந்த படிவங்கள் வழங்கப்படும்.
2. திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் வழங்கப்பட்டுள்ள சால்வன்சி 1.1.2010க்கு பிறகு பெறப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது கொடுத்துள்ள சால்வன்சிக்கு 1.1.2010க்கு பிறகு சார்பதிவகத்தில் இ.சி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
3. டெண்டர் ஷெட்யூல்கள் அனைத்தையும் மூடி முத்திரையிட்டு உறையின் மேல் பெயர் பெறுபவர் மற்றும் கொடுப்பவர் ஆகியோரின் முழு முகவரி தெளிவாக எழுதப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத உறைகள் பிரிக்கப்பட மாட்டாது
4. டெண்டருடன் அவ்வேலைக்கான முன் வைப்புத்தொகையை பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீது இணைக்கப்பட வேண்டும். டேவணித்தொகை செலுத்தப்படாத டெண்டர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.
5. டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்தல் ஏதும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒப்பந்தகாரரால் கையொப்பமிடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
6. வரபெறும் டெண்டர்களை பரிசீலனைக்காக பிரிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிர்வாக அதிகாரியின் தீர்ப்பே முடிவானதாகும். எந்த டெண்டரையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கவும் ஒப்புக்கொள்ளவும் செயல் அலுவலருக்கும், பேரூராட்சி மன்றத்திற்கும் உரிமையுண்டு.
7. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். எந்த வித டெண்டரையும் ஏற்றுக்கொள்ளவே, நிராகரிக்கவே மன்றத்திற்கும் அதிகாரம் உண்டு.
8. ஒப்புக்கொள்ளப்படாத மற்றும் வேலை கிடைக்கப்பெறாத ஒப்பந்தகாரர்களுடைய டெண்டர் டேவணித்தொகை மன்றத்தின் பரிசீலனைக்குப் பிறகு காசோலையாக வழங்கப்படும்.

9. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்த புள்ளி கொடுத்தஒப்பந்தகாரர் வேலை உத்திரவு (Work order) கிடைத்தவுடன் ரூ.20/—க்கு குறையாத முத்திரைத்தாளில் முச்சலிக்கா ஒப்பந்த படிவத்தில் ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

10. வேலைக்காக ஒப்பந்தகாரர் சேகரம் செய்யும் பொருட்கள் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த படிவம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அளவு கணக்கு எண்ணிக்கை அளவின் படி (சைஸ்) இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத சேகரங்களை நிராகரிக்க பேரூராட்சிக்கு உரிமையுண்டு.

11. ஒப்பந்தகாரர் உரிய காலக்கெடுவிற்குள் வேலையை செய்து முடிக்கத் தவறினால் தாங்கள் செலுத்தியள்ள டேவணி தொகை பறிமுதல் செய்து வேலை உத்திரவு (Work order) ரத்து செய்யப்படும். மாற்று ஏற்பாட்டின் மூலம் வேலைகளை நிறைவேற்றுவதால் ஏற்படும் இழப்பிற்கு அவரே பொறுப்பாக்கப்படுவதுடன், அபராதம் விதித்து வசூலிக்கப்படும்.

12. ஒப்பந்தகாரர் செலுத்தி இருக்கும் டேவணித்தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு அந்நிதியாண்டிற்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று பிடித்தம் ஏதும் இருப்பின் பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.

13. ஒப்பந்தகாரர் தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.

14. டெண்டர் வேலைக்கான ஷெட்யூல் படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் அட்டவணையில் கண்ட தொகைகளை செலுத்தி 15.12.2010 பிற்பகல் 3.00 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

15. பகுதி பட்டியலுக்கு கண்டிப்பாக தொகை பட்டுவாடா செய்யப்பட மாட்டாது. வேலை முழுவதும் முடிந்த பிறகு தான் பட்டியல் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

16. இவ்வேலைக்கு செயல் அலுவலர் நிர்ணயம் செய்யும் இடங்களில் கட்டி முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்தகாரர் தன்னிச்சையாக செயல் அலுவலர் நிர்ணயிக்காத இடங்களில் கட்டக்கூடாது. அவ்வாறு செய்யும் வேலைக்கு தொகை வழங்கப்பட மாட்டாது.

17. பணி நடைபெறும் இடத்தில் திட்ட விபரம் தெரிவித்து விளம்பரப்பலகை வைக்கப்பட வேண்டும்.

18. இப்பணி தொடங்கும் நிலையிலிருந்து பணி முடியும் நிலை முடிய ஆகிய மூன்று நிலையில் புகைப்படத்துடன் சமர்பிக்க வேண்டும்

19. ஒப்பந்தகாரர் வணிகவரி துறை பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும்.

20. பட்டியல் தொகையில் வருமான வரி, அதன்மேல் வரி, விற்பனை வரி, அதன்மேல் வரி மற்றும் கட்டிட தொழிலாளர் நலநிதி ஆகிய வகைள் பிடித்தம் செய்து மீதத்தொகைக்கு காசோலை வழங்கப்படும்.

21. ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தமான விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

திரு.**சி.நாகராஜன்** பி.காம்,
**தலைவர்**
பேரூராட்சி மன்றம்,
திருவையாறு.

திரு.**என்.மனோகர்,**
**செயல் அலுவலர்**
தேர்வுநிலை பேரூராட்சி,
திருவையாறு

**பெறுநர் :**

பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் அனைவருக்கும்.

**நகல் :**

1. தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர்.
3. இளநிலை பொறியாளர், பேரூராட்சி திருவையாறு.
4. தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பேரூராட்சி, திருவையாறு.
5. அலுவலக விளம்பர பலகைக்கு.
6. உள்ளூர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.